செ.வெ.எண்: 580 நாள்: 05.09.2019

# Voter helpline என்ற ஆன்ட்ராய்டு செயலியின் மூலம் வாக்காளர்கள் தங்களது புகைப்பட அடையாள அட்டையின் விபரங்களை கைபேசியிலேயே சரிபார்த்து திருத்தம் செய்யலாம்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் வாக்காளர் சரிபார்ப்பு இயக்கம் நடைபெறுவதையொட்டி வாக்காளர்பட்டியல் சிறப்பு சுருக்க முறைத்திருத்தம் குறித்து மாவட்ட ஆட்சியரகத்தில் ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.09.2018) செய்தியாளர்களை சந்தித்தார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் படி புகைப்பட வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்படி வாக்காளர் சரிபார்ப்பு இயக்கம் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் 01.09.2019 முதல் தொடங்கி நடைபெற்று வருவதுடன் 15.10.2019 வரை இப்பணி நடைபெறவுள்ளது. மேலும் 18 வயது பூர்த்தி அடைந்த அனைவரையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்க www.nvsp.in எனும் இணைய சேவை, Voter Helpline எனும் செயலி, பொது சேவை மையம், வாக்காளர் உதவி மையம், கட்டணமில்லா சேவை 1950 ஆகியவற்றின் மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

வாக்காளர்கள் தங்களது வாக்காளர் அடையாள அட்டையில் உள்ள விபரங்களை சரிபார்த்து திருத்தம் செய்யும் வகையில் voter help line என்ற செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த செயலியை வாக்காளர்கள் தங்களது ஆன்ட்ராய்டு கைப்பேசிகளில் பதிவிறக்கம் செய்து தங்களது வாக்காளர் அடையாள எண் மற்றும் இருப்பிடத்தை பதிவு செய்தால் தங்களது வாக்காளர் அடையாள அட்டையை பார்த்து விபரங்களை சரிபார்த்து கொள்வதுடன், தவறுகள் இருப்பின் சரியான தகவல்களை வழங்கி அதிலே சரிசெய்யலாம். மேலும் தங்களது குடும்ப உறுப்பினர்களின் வாக்காளர் அடையாள அட்டைகளின் விபரங்களை சரிசெய்து கொள்ளலாம். மேலும் Voter Helpline செயலி குறித்து

பள்ளி, கல்லுரி மற்றும் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் உரிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்திற்கான வரைவு வாக்காளர் பட்டியல் 15.10.2019 அன்று வெளியிடப்பட உள்ளது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம் 6ம், பெயர்களை நீக்கம் செய்ய படிவம் 7-லிலும், பெயர் மற்றும் விபரங்களில் திருத்தம் மேற்கொள்ள படிவம் 8-லிலும், ஒரே தொகுதியில் இடம் மாறியுள்ள வாக்காளர்கள் படிவம் 8A-லிலும் உரிய ஆவணத்துடன் விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அனைத்து வாக்குசாவடி மையங்களிலும் பொதுமக்கள் தங்களது விண்ணப்பங்களை 15.10.2019 முதல் 30.11.2019 வரை மேற்கண்ட வாக்குசாவடி மைய அலுவலர்களிடம் அலுவலக நாட்களில் வேலை நேரம் முடிந்த பின்பு ஒரு மணிநேரமும் 02.11.2019 (சனிக்கிழமை), 03.11.2019 (ஞாயிற்றுகிழமை), 09.11.2019 (சனிக்கிழமை), மற்றும் 10.11.2019 (ஞாயிற்றுகிழமை) ஆகிய நான்கு நாட்கள் நடைபெற உள்ள சிறப்பு முகாம்களின்போது காலை 10.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை அளிக்கலாம்.

மேலும் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள், புதுக்கோட்டை சார் ஆட்சியர் மற்றும் அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களிலும் அலுவலக நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணிவரை படிவங்கள் அளிக்கலாம். எனவே பொதுமக்கள் இம்முகாமினை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தெவித்துள்ளார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) முத்துவடிவேல், வட்டாட்சியர்(தேர்தல்கள்) ரெத்தினாவதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**